# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடக்கு மாகாணம்

## துரித கற்றல் கையேடு தரம் :- 04

## தமிழ்

சிறுவர்பாடல்

**<u>எங்கும் கேட்டிடலாம்</u>**

- ஓரிடத்தில் இருந்திடலாம்
  ஓடி ஓடிக் கேட்டிடலாம்
  பாடகரைப் பார்த்திடாமல்
  பாட்டுக்களைக் கேட்டிடலாம்

- வாத்தியங்களை இசைத்திடாமல்
  வாத்திய இசை கேட்டிடலாம்
  ஊரெங்கும் போய்வராமல்
  ஊர்ப்புதினம் கேட்டிடலாம்

- அறிஞர்களைச் சந்திக்காமல்
  அறிவுரைகள் கேட்டிடலாம்
  உலகமெங்கும் சுற்றிடாமல்
  உலகச் செய்தி கேட்டிடலாம்.

- விழாக்களுக்கு சென்றிடாமல்
  வர்ணனைகள் கேட்டிடலாம்
  கேட்டிடலாம் கேட்டிடலாம்
  கேட்டுக்கொண்டே இருந்திடலாம்

வி.என்.எஸ்.உதயசந்திரன்

- பாடலை உரத்து வாசித்து மனனம் செய்க
- வானொலி பற்றி மூன்று வாக்கியம் எழுதுக.

1. ..........................................................................
2. ..........................................................................
3. ..........................................................................

சிறுவர்பாடல்

**<u>குழந்தைகளே கேளீர்</u>**

குடைபிடித்து செருப்புமிட்டு
புத்தகமும் கொண்டு
குடுகுடென நடந்துவரும்
குழந்தைகளே கேளீர்

மழைக்காலம் வழி வழுக்கும்
மிகக் கவனம் மக்காள்
வழியருகே வெள்ளமுண்டு
விலகிவர வேண்டும்

வெள்ளத்திலே கல்லெறிந்து
விளையாட வேண்டாம்
வீண்சண்டையால் வழுக்கி
விழுந்தெழும்ப வேண்டாம்

கண்மணிகாள் நீர்ச் சிரங்கு
காலில் வரும் கவனம்
கண்ணுறக்க மில்லாமற்
கதறியழ நேரும்

அம்மா சொல்லைத் தட்டிடாமல்
ஆசிரியர்க் கடங்கி
ஆசையுடன் பள்ளியிலே
படித்துவர வேண்டும்

❖ மழைக்காலம் பற்றி மூன்று வாக்கியம் எழுதுக.

1. ……………………………………………………………………

2. ……………………………………………………………………

3. ……………………………………………………………………

❖ தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பாடலைப் பூர்த்தி செய்க

| ஓடி ஓடிக் , பாட்டுக்களைக் |
|---|

ஓரிடத்தில் இருந்திடலாம்
……………….. கேட்டிடலாம்
பாடகரைப் பார்த்திடாமல்
……………… கேட்டிடலாம்

| வாத்திய இசை , ஊர்ப்புதினம் |
|---|

வாத்தியங்களை இசைத்திடாமல்
……………………..கேட்டிடலாம்
ஊரெங்கும் போய்வராமல்
. ……………………..கேட்டிடலாம்

| அறிவுரைகள் , உலகச் செய்தி |
|---|

அறிஞர்களைச் சந்திக்காமல்
…………………… கேட்டிடலாம்
உலகமெங்கும் சுற்றிடாமல்
…………………. கேட்டிடலாம்.

| வர்ணனைகள் , கேட்டுக்கொண்டே |
|---|

விழாக்களுக்கு சென்றிடாமல்
…………………..கேட்டிடலாம்
கேட்டிடலாம் கேட்டிடலாம்
…………………..இருந்திடலாம்

வி.என்.எஸ்.உதயசந்திரன்

---

இடைவெளி நிரப்புக.

❖ குடைபிடித்து செருப்புமிட்டு
…………………… கொண்டு
குடுகுடென நடந்துவரும்
…………………… கேளீர்

❖ கண்மணிகாள் நீர்ச் சிரங்கு
……………. வரும் கவனம்
கண்ணுறக்க மில்லாமற்
……………. நேரும்

❖ ………………. வழி வழுக்கும்
மிகக் கவனம் மக்காள்
………………...வெள்ளமுண்டு
விலகிவர வேண்டும்

❖ அம்மா சொல்லைத் தட்டிடாமல்
………………. கடங்கி
ஆசையுடன் பள்ளியிலே
…………… வேண்டும்

❖ வெள்ளத்திலே கல்லெறிந்து
………………. வேண்டாம்
வீண்சண்டையால் வழுக்கி
………………. வேண்டாம்